III ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT, THIRUVALLUR AT POONAMALLEE

O.S.148/2016

Deposition of witness for the Plaintiff/PW1
Respondent solemnly by Tmt. R. Santhi Translator
in accordance with the provision of Act I for 1873 on 03-01-2024

| | | | |
|---|---|---|---|
| Name | : Roopraj | Caste | : |
| Father's Name | : | Calling | : |
| Age | : | Religion | : |
| Village | : | Taluk | : |

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

பி.த,சா.3 ல் முதலாவது சாட்சியாக உஷா என்பவர் கையொப்பமிட்டுள்ளார். நான் வேறு நீதிமன்றங்களில் வழக்குகள் தாக்கல் செய்துள்ளேன். அசல் வழக்கு எண்.6085/2019 ல் நான் சென்னை நகர உரிமையியல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். அதில் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்புரையின் நகல் தான் தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணம். (அது பி.த,சா.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.) அந்த வழக்கில் பிரதிவாதிகள் மாயகிருஷ்ணன் மற்றும் தட்சிணாமூர்த்தி ஆகியோர் என்னிடம் வாங்கிய கடனை வட்டியுடன் திருப்பி கொடுக்க பரிகாரம் கேட்டு தாக்கல் செய்தேன். அதில் முதலாம் பிரதிவாதி அசல் கிரைய பத்திரங்களை கொடுத்ததாகவும் முதலாம் பிரதிவாதி எனது பெயர் பவர் பத்திரம் எழுதி கொடுத்ததாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் எனது பெயரிலும் எனது மனைவி பெயரிலும் கிரைய ஒப்பந்த பத்திரங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. பொதுவாக நான் பணத்தை கடனாக கொடுக்கும் போது கடன் வாங்கியவர்களிடமிருந்து அவர்களின் சொத்துக்களின் பவர் பத்திரத்தையும் கிரைய ஒப்பந்ததத்தையும் எனது பெயரில் ஏற்படுத்திக்கொள்வது தான் வழக்கம் என்றால் சரியல்ல. குறுக்குவிசாரணையின் ஆரம்பத்தில் நான் யாரிடமும் பவர் பத்திரம் போட்டுக்கொள்ளவில்லை என்று சொல்லியுள்ள நிலையில் தற்போது எனது பெயரில் உள்ள பவர் பத்திரங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில் நான் முரணாகவும் பொய்யாகவும் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. வா.த.சா.5 ல் நான் வா.த,சா.2 முதல் 5 வரையிலான சங்கதிகள் பற்றி குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்திருக்கும் கிரைய ஒப்பந்தத்தின் தேதி 10.12.2012. காலவரைக்குள் இந்த வழக்கு தாக்கல்

செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. வா.த,சா.2 முதல் 4 வரையிலான ஆவணங்களில் உள்ள கையொப்பத்தை பிரதிவாதி ம.றுத்திருக்கம் நிலையில் அதை ஒப்பிட்டு பார்ப்பதற்கும் அது அவரின் கையொப்பம் தான் என நிரூபிப்பதற்கும் நடவடிக்கை எடுத்தேனா என்றால் இல்லை. வா.த,சா.2 முதல் 4 வரையிலான ஆவணங்களை நான் இந்த வழட்ககிற்காக போலியாக தயார் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வா.த,சா.2 ன் படி எவ்வளவு பணம் கொடுத்தாக சொல்லப்பட்டுள்ளது என்றால் ரூ.15,00,000/– வா.த,சா.3 ன் படி எவ்வளவு பணம் கொடுத்தாக சொல்லப்பட்டுள்ளது என்றால் ரூ.30,00,000/–. வா.த,சா.4 ன் படி எவ்வளவு பணம் கொடுத்தாக சொல்லப்பட்டுள்ளது என்றால் ரூ.8,00,000/–. அந்த மூன்று தொகைகளையும் நான் ரொக்கமாக கொடுத்தேன். அந்த பணம் எனக்கு எவ்வாறு வந்தது என்றால் எனது வங்கி கணக்கிலிருந்து பணம் எடுத்து கொடுத்துள்ளேன். அந்த எனது வங்கிக் கணக்கின் விவரங்களை தாக்கல் செய்துள்ளேனா என்றா் இல்லை. தாக்கல் செய்ய உள்ளேன். வருமான வரி சட்டப்படி மேற்கூரிய மூன்று தொகைகளையும் ரொக்கமாக கொடுப்பது புறம்பானது என்றால் சரியல்ல. எனது வருமான வரி கணக்கில் மேற்கூரிய பண அலுவல்களை காண்பித்துள்ளேன். அந்த வருமான வரி ரிட்டன்களை நான் இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. அந்த வருமான வரி ரிட்டன்களை நான் தாக்கல் செய்ய தயாராக உள்ளேன். வா.த.சா.2 முதல் 4 வரையிலான சங்கதிகளை நந்தகோபால் என்பவர் எழுதினார். மூன்று ஆவணங்களையும் நந்தகோபால் எழுதவில்லை என்றும் வெவ்வேறு நபர்கள் எழுதியுள்ளார்கள் என்றால் சரியல்ல. நந்தகோபாலை நான் சாட்சியாக விசாரிக்க உள்ளேனா என்றால் இல்லை. அவர் தஞ்சாவூர் அருகில் இருக்கிறார். வா.த.சா.3 ல் கையொப்பத்தில் 'K' என்பதற்கு முன்னர் ஏதோ கிறுக்கல் உள்ளது என்றால் சரிதான். வா.த,சா.2 முதல் 4 ல் கையொப்பத்தில் 'ன்' – களில் மேலே உள்ள புள்ளி பூஜ்ஜியம் என்ற வடிவில் உள்ளது என்றால் சரிதான். பிரதிவாதி எப்போதும் தனது கையொப்பத்தில் 'ன்' –ல் மேலே புள்ளி, புள்ளி என்ற வடிவில் தான் போடுவார் என்றும், பூஜ்ஜியம் என்ற வடிவில் போடுவது அவரது வழக்கம் இல்லை என்று சொன்னால் அதில் உள்ளது அவரது கையெழுத்து தான். பிரதிவாதியின் எதிர் வழக்குரையில் அவரது கையொப்பத்தில் 'ன்' –ல் புள்ளி தான் வைத்துள்ளார் என்றும் பூஜ்ஜியம் போடவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. அவர் இரண்டும் வைத்துள்ளார். வா.த,சா.5 ல் வா.த.சா.2 முதல் 4 பற்றிய சங்கதிகள் குறிப்பிடப்படாத நிலையில், வா.த.சா.5 பின்னிட்டு என்னால் இவ்வழக்கிற்காக தயார் செய்யப்பட்டுள்ளது

என்றால் சரியல்ல. கிரைய ஒப்பந்ததிற்கு பின்னிட்டு நான் பணம் கொடுத்திருந்தால் அது பற்றிய விவரங்களை கிரைய ஒப்பந்தத்தின் தாள்களின் பின் பக்கத்தில் குறிப்பிடுவது தான் வழக்கம் என்றும் அவ்வாறு குறிப்பிடாமல் தனியாக வா.த.சா.2 முதல் 4 வரை ஏற்படுத்திக் கொள்வதற்கு காரணம் என்ன வென்றால், அந்த நேரத்தில் வா.த,சா.1 லாக்கரில் இருந்தது. வா.த,சா.2 முதல் 4 வரையிலான படிவங்களை நான் ஸ்டேஷ்னரி கடையிலிருந்து வாங்கி வந்தேன். லாக்கரிலிருந்து வா.த.சா.1ஐ எடுத்து அதன் தாள்களின் பின் புறத்தில் மேற்குறிப்பு பெறுவது சுலபமா அல்லது ஸ்டேஷ்னரி கடைக்கு சென்று வா.த,சா.2 முதல் 4 வரையிலான படிவங்கள் வாங்கி பெற்று அதில் சங்கதிகள் எழுதி ஆவணங்கள் ஏற்படுத்துவது சுலபமா என்றால் பிரதிவாதி அந்த ஆவணங்களில் பணம் வாங்கி கையொப்பம் போட்டார். அந்த வா.த,சா.1 ஆவணத்தை கனரா வங்கி லாக்கரில் வைத்திருந்தேன். அந்த ஆவணத்தை கனரா வங்கி லாக்கரில் வைத்திருந்தது பற்றி வழக்கறிஞர் அறிவிப்பிலோ வழக்குரையிலோ பிரமாணவாக்குமுலத்திலும் கூறியுள்ளேனா என்றால் இல்லை. ஆதலால் நான் அந்த விவரத்தை நான் இந்த வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. வா.த.சா.2 முதல் 4 வரையிலான ஆவணங்களில் சாட்சிகளின் கையொப்பம் இல்லை. வா.த.சா.2 முதல் 4 போலியானது என்றும் இவ்வழக்கிற்காக தயார் செய்யப்பட்டது என்றும் சொன்னால் சரியல்ல.

(பிரதிவாதிகள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.)